<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 341/2015 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | சுப்ரமணி | நாள் | 10.09.2024 |
| தகப்பனார் பெயர் | அம்மாசி | | |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>**

15) 1, 7, 9, 10, 13 ம் பிரதிவாதிகள் எந்த சர்வே எண் வழியாக அவர்களது நிலங்களுக்கு செல்கிறார்கள் என சொல்லியுள்ளோம் என்றால், ச.எண்.248/1A3 வழியாக செல்வதாக சொல்லியுள்ளோம். அதேபோல் 17, 18 பிரதிவாதிகள் எந்த சர்வே எண் வழியாக தங்களது நிலங்களுக்கு செல்வதாக சொல்லியுள்ளோம் என்றால், மேற்படி அதே சர்வே எண் வழியாகத்தான் அவர்களும் செல்வதாக சொல்லியுள்ளோம். நான் சொல்வது தவறானது என்றால், சரியல்ல. மேச்சேரி – சிந்தாமணியூர் செல்லும் மெயின்ரோட்டிலிருந்து நேரடியாக அவரவர்கள் நிலத்திற்கு சென்று வரலாம். நான் சொல்வது தவறானது என்றாலும், ஒருவர் நிலத்தின் வழியாகத்தான் மற்றவர்கள் செல்லும் வகையில் மண் பாதை அமைந்துள்ளதாக அ.வ.எண்.194/2013 என்ற வழக்கில் நியமிக்கப்பட்ட நீதிமன்ற ஆணையரே அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், சரியல்ல.

16) அதற்கு பின்னிட்டு இவ்வழக்கை 2 ஆண்டுகள் கழித்து நாங்கள் தாக்கல் செய்து அதில் தாக்கல் செய்யப்பட்ட தவறான நீதிமன்ற ஆணையரின் அறிக்கைப்படி வழக்காடி வருகிறோம் என்றால், சரியல்ல. 17, 18 பிரதிவாதிகளுக்கு எந்த சர்வே எண்ணில் சொத்து அமைந்துள்ளது என்றால், ச.எண்.248/1A3 ல் தான் சொத்து உள்ளது. மேற்படி 17, 18 பிரதிவாதிகளுக்கு மேற்படி சர்வே எண்ணில் எவ்வளவு சொத்து உள்ளது என்றால், மேற்படி இருவருக்கும் சேர்த்து 53-1/4 சென்ட் நிலம் உள்ளதாக வழக்கில் சொல்லியுள்ளோம். நான் சொல்வது தவறானது என்றாலும், மேற்படி இருவருக்கும் ச.எண்.248/1A2 ல் 74 சென்ட் நிலம் பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ளோம் என்றால், சரிதான்.

17) ச.எண்.248/1A2 ல் 17, 18 பிரதிவாதிகளுக்கு 70 சென்ட் நிலம் பாத்தியப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. 17 ம் பிரதிவாதி கந்தசாமிக்கு ச.எண்.248/1A3 ல் 53-1/4 சென்ட் நிலம் பாத்தியப்பட்டதாக நான் சொல்வது தவறானது என்றால், சரியல்ல. என் தந்தை

அம்மாசி என்பவர் ச.எண்.248/1B ல் 3 வில்லை வீடும், 1 கூரை வீடும் கட்டினார் என வழக்குரையில் சொல்லியுள்ளோம் என்றால், சரிதான். மேற்படி என் தந்தை உயிருடன் இருந்த காலத்தில் ச.எண்.248/1A3 ல் 2 சிமெண்ட் அட்டை போட்ட வீட்டை கட்டியுள்ளதாக நாங்கள் சொல்லியுள்ளது பொய்யானது என்றால், சரியல்ல.

18) ச.எண்.248/1A3 ல் 1 கூரை வீடும், 1 சிமெண்ட் அட்டை வீடும் மட்டும் தான் உள்ளது என்றால், சரியல்ல. அதில் 1 கூரை வீடும், 1 கான்கீரிட் வீடும், 1 அட்டை வீடும் உள்ளது. நான் சொல்வது தவறானது என்றாலும், அவ்வாறு எந்த சங்கதிகளையும் என் வழக்குரையில் நாங்கள் குறிப்பிடவில்லை என்றாலும், அவ்வாறு நீதிமன்ற ஆணையரின் அறிக்கையிலும் குறிப்பிடவில்லை என்றாலும், சரியல்ல. அவ்வாறு ச.எண்.248/1A3 மற்றும் ச.எண்.248/1B ஆகியவற்றில் கட்டுமானங்கள் உள்ளதை காண்பிக்க எவ்வித ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன்.

19) மேற்படி இரு சர்வே எண்களிலும் உள்ள அட்டை வீடுகளுக்குரிய கதவு எண்கள் என்னவென்றால், அதுகுறித்து எனக்கு தெரியவில்லை. என் முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கையில் 17, 18 பிரதிவாதிகள் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டனர் என நான் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். எப்போது பாகம் பிரித்துக்கொண்டனர் என்றால், வருடம் எனக்கு தெரியாது. மேற்படி வாய்மொழி பாகபிரிவினையில் 17 ம் பிரதிவாதிக்கு என்ன சொத்து ஒதுக்கப்பட்டது, 18 ம் பிரதிவாதிக்கு என்ன சொத்து ஒதுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. மேற்படி வாய்மொழி பாகபிரிவினையின் அடிப்படையில் அவர்களது பெயரில் பட்டா ஏதேனும் வழங்கப்பட்டதா என்றால், அதுவும் தெரியாது. அதேபோல் வாய்மொழி பாகபிரிவினையில், 17 ம் பிரதிவாதிக்கு என்ன செக்குபந்திகள் ஒதுக்கப்பட்டது என்றும், 18 ம் பிரதிவாதிக்கு எந்த செக்குபந்திகள் ஒதுக்கப்பட்டது என்றும், எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

20) சிந்தாமணியூர் சாலைக்கு எந்த புறத்தில் வாதி, பிரதிவாதிகளின் நிலங்கள் உள்ளது என்றால், மேற்குபுறத்தில் உள்ளது. ச.எண்.248/1A3 க்கு எந்த திசையில் ச.எண்.248/1A2 அமைந்துள்ளது என்றால், மேற்படி இரண்டு சர்வே எண்களும்

சிந்தாமணியூர் சாலைக்கு மேற்கில் அமைந்துள்ளது. ச.எண்கள்.248/1A1, 248/1A2, 248/1B ஆகியவை ச.எண்.248/1A3 க்கு மேற்கில் அமைந்துள்ளது என்றால், சரிதான். மேற்படி ச.எண்.248/1A3 க்கும், அதற்கு மேற்குபுறத்தில் அமைந்துள்ள ச.எண்கள்.248/1A1, 248/1A2, 248/1B ஆகியவற்றிற்கும் நடுவே தென்வடலாக நான்கு அடி அகல மண்பாதை உள்ளது என்றால், சரியல்ல. அவ்வாறு மண்பாதை எதுவும் இல்லை.

21) ச.எண்.248/1A3 ல் மேற்கு புறமாக 2 அடி உயர கல்கறை அமைந்துள்ளது என்றால், சரிதான். ச.எண்.248/1A3 க்கும், ச.எண்.248/1B க்கும் தெற்குபுறமாக சுமார் 10 அடி அகல நடைபாதை உள்ளது என்றால், உள்ளது. ஆனால், அது எங்களுக்கு பாத்தியப்பட்ட பாதையாகும். ச.எண்.248/1A3 ல் தென்புறமாக சேகர் என்பவரின் தொகுப்பு வீடு உள்ளது என்றால், சரிதான்.

22) மேற்படி சிந்தாமணியூர் மெயின்ரோட்டிலிருந்து மேற்குபுறமாக அமைந்துள்ள ச.எண்.248/1A3 ல் கிழபுறமாக மின் கம்பம் அமைந்துள்ளது என்றால், சரிதான். அதற்கு நேராக கிழக்குபுறமாக மற்றொரு மின் கம்பம் அமைந்துள்ளது என்றால், சரிதான். ச.எண்.248/1B லும் ஒரு மின் கம்பம் உள்ளது என்றால், சரிதான். மேற்படி ச.எண்.248/1A3 ல் உள்ள மின் கம்பத்திலிருந்து தான் மற்ற இரு மின் கம்பங்களுக்கும் இணைப்பு செல்கிறது என்றால், சரிதான்.

23) மேற்படி சேகர் வீட்டின் வடக்குபுறம் பெரியண்ணன் என்பவரது கூரை வீடு உள்ளது என்றால், சரிதான். அதற்கு வடக்குபுறமாக கல்கட்டை ஒட்டி கிழக்குபுறமாக ஒரு மின் கம்பம் உள்ளது என்றால், சரியாக நினைவில்லை.

பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.2 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,<br>
மாவட்ட உரிமையியல் நீதிபதி,<br>
மேட்டூர்.